தைரியமான ஒபடையா

தமிழில் கிருஷ்ணன்




இதோ இந்த
தொலைநோக்கியை எடுத்து
கொண்டு ஓடுகிறானே
இவன் தான் ஒபடையா
ஸ்டார்புக். இந்த
தொலைநோக்கி செம்பால்
செய்யப்பட்டது. பார்க்க
மிகவும் அழகானது.





அவனுடைய குடும்பத்தினர் அனைவரும் நல்ல ஆடை அணிந்து கொண்டு நண்பர்களுடனான ஒரு சந்திப்பிற்கு செல்கின்றனர். அப்பா, அம்மா, மோசஸ், அசா, ரெபேக்கா மற்றும் ரச்சேல். ரெபேக்காவிற்கும் ரச்சேலுக்கும் நடுவே பிறந்தவன் தான் ஒபடையா. இந்த தொலைநோக்கி அவனுடைய பிறந்தநாள் பரிசு. தொலைநோக்கியை ஒபடையா எடுத்து வர அவனுடைய அப்பா அனுமதிக்கவில்லை. அதனால் அதை திரும்பி வீட்டில் வைக்க ஓடினான்.

மாதத்தில் ஒவ்வொரு முதல் நாளும் நான்டுக்கெட் தீவில் வசிக்கும் குவாக்கர் சமூகத்தினர் சந்தித்துக் கொள்வார்கள். ஆண்கள் ஒரு பக்கமும், பெண்கள் மற்றொரு பக்கமும் அமர்வார்கள். ஒபடையா அங்கு வந்து சேரும் போதே சந்திப்பு தொடங்கி விட்டது. ஆண்கள் இருக்கும் பக்கத்தில் ஒரு மர பெஞ்சில் உட்கார்ந்து கொண்டான்.







தொழுகைக்கான சந்திப்பு எப்போதும் அமைதியாகவும், நீண்டதாகவும் இருக்கும். சில நேரங்களில் நண்பர்கள் யாரவது எழுந்து பைபிளில் இருக்கும் வாக்கியங்களை படிப்பார்கள், அல்லது அதை பற்றி பேசுவார்கள். ஒபடையா கடவுளை நினைத்து பிராத்தனை செய்வான். ஆனால் அடுத்த கணமே அவனது மனம் தொலைநோக்கியின் மீது சென்றுவிடும். ஒரு ஈ ஜன்னல் கண்ணாடியின் மேல் பறந்து சென்றது. அந்த நொடி நேரத்தில் ஒபடையாவுக்கு தெரியும் “தான் பெரியவன் ஆனவுடன் என்னவாக வேண்டும் என்று.”

ஆம் அவனுக்கு ‘கடல் கொள்ளைக்காரன்’ ஆக வேண்டும். கடலில் சுற்றி அலைந்து திரியும் எந்த பயமும் இல்லாத, நிறைய புதையல்களை ரகசிய இடங்களில் புதைத்து வைத்திருக்கும் கொள்ளைக்காரன் ஆக வேண்டும். ஏழு கடலுக்கும் திகில் கொடுக்கும் ‘சிம்ம சொப்பனம்’ ஒபடையா என்று பெயர் வாங்க வேண்டும் என்பதே அவனது ஆசை.






ஒபடையாவின்
தொலைநோக்கி அவனுடன்
எல்லா இடத்திற்கும்
சென்றது. உதாரணத்திற்கு
அவன் படகு துறைக்கு
சென்றால் அவனுடன்
அங்கும் செல்லும். தூங்க
போகும் போது அவனுடன்
படுக்கைக்கும் செல்லும்.



சாப்பிடும் போது அந்த சாப்பாட்டு மேஜையிலும் இருக்கும். ஒபடையா எல்லோருக்கும் முன் “பெரியவனாகும் போது நான் ஒரு கடல் கொள்ளைக்காரன் ஆவேன்” என்றான்.
மோசஸ் ஒரு குறும்பு சிரிப்புடன் “குவாக்கர் சமூகத்திலிருந்து யாராவது இது வரை கடல் கொள்ளைக்காரனாகி இருக்காங்களா?” என்று ஆசாவை பார்த்து கேலியுடன் கேட்டான்.
அவனுடைய அம்மா “ஏன் இருக்க கூடாது ஒபடையா ஒரு நல்ல கொள்ளைக்காரனாக இருப்பான்” என்று கூறினாள். எல்லோரும் சிரித்தார்கள்.

“எனக்கு தெரிந்த வரை ஸ்டார்புக் குடும்பத்தில் இது வரை யாரும் கடல் கொள்ளைக்காரன் ஆனதில்லை. ஆனால் உனக்கு அது தான் ஆக வேண்டும் என்றால் அது உன்னுடைய விருப்பம். நீ நல்ல ஒரு கொள்ளைக்காரனாக வருவாய் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது.” என்றார் அப்பா.





ஒரு மழை நாளில் ராச்சேல்
ஒபடையாவை விளையாட
கூப்பிட்டாள்.
“நான் வரமாட்டேன் இந்த
விளையாட்டெல்லாம் சிறு
பிள்ளைகள் ஆடுவது” என்றான்
ஒபடையா
மோசஸ், ஆசா மரக்கட்டைகளை
அடுக்கி
கொண்டிருந்தனர். ரெபேக்கா
அடுப்பை சுத்தம் செய்து
கொண்டிருந்தாள்.
“கடல் கொள்ளைக்காரன்
விளையாட்டு விளையாடலாம்”
என்றான் ஒபடையா.





“சரி” என்றாள் ஆசா. “நானும் மோசஸும் உன்னை பிடிப்போம்” என்று சொல்லி கொண்டே ஒபடையாவை கயிற்றால் காட்டினாள். கண்ணை ஒரு துணியை கொண்டு கட்டினாள். “உன்னை ஒரு சிறையில் அடைக்கிறோம்” என்று ஒபடையாவிடம் கூறினார்கள்.




"இது அழுகுனி ஆட்டம்"
என்று கத்தினான்
ஒபடையா
"இதுவும் ஒரு வகை ஆட்டம்
தான்" என்று கூறி அவனை
ஒரு சிறிய அறைக்குள்
தள்ளி விட்டனர்.

கடல் கொள்ளைக்காரர்கள்
தைரியமானவர்கள் எதற்கும் அழ
மாட்டார்கள்.
ஆனால் ஒபடையாவிற்கோ பயம் வந்து
விட்டது. அழ வேண்டும் போல் இருந்தது.
அந்த அறையிலிருந்த கதவை தள்ளி
பார்த்தான். ஆனால் யாரோ அதை
தடுப்பதாக உணர்ந்தான்.
"நிறுத்துங்கள் ! இந்த கொள்ளைக்காரனை
கயிற்றில் கற்றி தொங்க விடலாமா? நாயை
போல் இழுத்து செல்லலாமா?" என்றது ஒரு
குரல்.
"மோசஸுடைய குரல் போல் இல்லையே"
என்றான் ஒபடையா
"இல்லை இவனை கடலுக்கு அடியில் தள்ள
வேண்டும் அந்த மர பலகையை கொண்டு
வாருங்கள்" என்றது ஒரு குரல்.
"ஆசாவுடைய குரல் போல் இல்லையே"
என்றான் ஒபடையா



சிறிது நேரத்திலேயே கதவு திறந்தது. ஒபடையாவை தள்ளி கொண்டே ஒரு மர பலகையின் மேல் நிற்க வைத்தனர். தட்டி தடுமாறி அவன் பலகையில் நின்றான்.
“நட” என்று ஒரு குரல் வந்தது. ஒபடையாவோ பயத்தில் நகரவே இல்லை.
“அந்த கம்பால் தள்ளி விடு” என்று யாரோ சொன்னார்கள்
ஏதோ குச்சியால் பின்னால் இருந்து யாரோ தள்ளுவது போல் உணர்ந்தான் ஒபடையா.
முதுகில் ஏதோ அழுத்தத்தை உணர்ந்தான். மேலிருந்து குதிக்க வேண்டும் போன்ற உணர்வு அவனுக்கு தோன்றியது.





தான் தரையில் விழுந்திருப்பதை
உணர்ந்தவுடன் ஆச்சரியபட்டான்
ஒபடையா. ரெபேக்கா கண்ணில்
கட்டிய துணியையும், உடம்பில்
கயிரையும் கழட்டி விட்டாள். அவன்
நின்றிருந்த பலகை சாதாரண
மரபலகையே. துடப்பத்தின் நுனியில்
தான் அவனை தள்ளி விட்டார்கள்.
மோசஸும் ஆசாவும் கொல்லென்று..!
சிரித்தார்கள். ஒபடையாவுக்கோ
எரிச்சலாக இருந்தது.
மதிய நேரம் முழுவதும் ரச்சேலுடன்
விளையாடினான்.
அன்றிரவு ஒபடையா அவனுடைய
தொலைநோக்கியை சாப்பிடும்
மேஜைக்கு எடுத்து செல்லவில்லை.
அவன் தூங்கும் கட்டிலுக்கும் எடுத்து
செல்லவில்லை .



அடுத்த நாள் ஒபடையா அப்பாவின்
அறையின் வாசலில் முன்பு மூன்று முறை
இங்கும் அங்குமாக நடந்தான்.
ஒபடையாவை பார்த்த அப்பா தான் எழுதி
கொண்டிருந்த கடிதத்தை நிறுத்தி விட்டு
அவனை உள்ளே அழைத்தார் “வா மகனே”
என்றார் அப்பா.
ஒபடையா மேஜைக்கு முன் வந்து நின்றான்.
அப்பாவிடம் எப்படி பேச்சை
ஆரம்பிப்பது என்று அவனுக்கு
தெரியவில்லை.
“ஏதாவது பிரச்சனையா?” என்றார் அப்பா
அப்பா கடல் கொள்ளையர்கள் கண்டிப்பாக
மரப் பலகையில் நடக்க வேண்டுமா?
ஆமாம் அவர்கள் மாட்டி கொண்டால் நடக்க
வேண்டும்.
“அதே போல் அவர்கள் கயிற்றில் தொங்கவும்
தெரியனுமா?” என்று கேட்டான் ஒபடையா.
“ஆமாம் ரொம்ப சேட்டை செய்ய
கூடியவனாக இருந்தால்
கண்டிப்பாக” என்றார் அப்பா.

“அப்பா எனக்கு கடல்
கொள்ளைக்காரனாக
விருப்பமில்லை” என்றான்
ஒபடையா.
அப்பா “ஒபடையாவை தூக்கி மடி
மேல் உட்கார வைத்து
கொண்டார்.”
“நீ நினைப்பது போல்
கொள்ளைக்காரர்கள் ஒன்னும்
அவ்வளவு தைரியசாலிகள்
இல்லை. எனக்கு தெரிந்த வரை
எந்த கொள்ளைக்காரனுக்கும் உன்
தாத்தாவை போல் தைரியம்
இருந்ததில்லை.”
“அப்படி தாத்தா என்ன செய்தார்
அப்பா?” என
கேட்டான் ஒபடையா
“ஹார்ன் னை நான்கு தடவை
சுற்றி வந்துள்ளார்” என்றார்
அப்பா
“ஹார்ன் என்றால் என்ன அப்பா?”



“கேப் ஹார்ன்” என்பது தெற்கு அமெரிக்காவின் நுனியில் உள்ள ஒரு இடம். அந்த இடத்தை அடைவதற்கு சீனா கடலை கடந்து செல்ல வேண்டும். அது அவ்வளவு எளிதான காரியமில்லை. மிகவும் ஆபத்தானது.” ஏன்? என்றான் ஒபடையா.

“பனி பாறைகளும், மிகவும் மோசமான வானிலையும் உடைய கடல் அது. கொடுங்க்காற்று வீசும் இடம் அது. தாத்தா பயணம் செய்த கப்பல் இரண்டு முறை உடைந்து போனது. ஆனால் தாத்தா அதை பழுது பார்த்து மீண்டும் இங்கு கொண்டு வந்து சேர்த்தார். கப்பலை மட்டும் அல்ல வேலை செய்த எல்லோரையும் காப்பாற்றி இங்கு கொண்டு வந்து சேர்த்தார். அவர் ஒரு சிறந்த மாலுமியாக இருந்தார். அவருடன் வேலை செய்தவர்கள் அவரின் தலைமையை பாராட்டி அவருக்கு பரிசு கொடுத்தனர்.”




“என்ன பரிசு அது அப்பா” என்றான் ஒபடையா
“நான் உனக்கு அதை காண்பிக்கிறேன் என்று கூறி அறையின் ஓரத்தில் இருந்த அலமாரியில் இருந்த ஒரு சிவப்பு பெட்டியை எடுத்து வந்தார் அப்பா. அதை அவர் திறந்த போது ஒரு அழகான பொருளை எடுத்தார்.” இது வரை ஒபடையா அப்படி ஒரு அழகான பொருளை கண்டதே இல்லை.

“ஐ ! பாக்கெட் கடிகாரம்!” என்றான் ஒபடையா

“இந்த கடிகாரம்
மாலுமிகளுக்கானது “மகனே. இதன் பெயர் க்ரோனோ- மீட்டர். இது துல்லியமாக கப்பல் கடலில் எங்கு இருக்கிறது என்று காட்டிவிடும்” என்றார் அப்பா “எடுத்து தான் பாரேன்” என்றார் ஒபடையாவிடம்.
மிக கவனமாக அதை எடுத்து பார்த்தான் ஒபடையா
“சரி அதை கொஞ்சம் திருப்பி பாரேன்” என்றார் அப்பா.



ஏதோ எழுதியிருந்தது கடிகாரத்தின் பின்னால். ஒபடையாவால் முழுதும் படிக்க முடியாவிட்டாலும் ஒரு வார்த்தை மட்டும் அவனுக்கு தெளிவாக தெரிந்தது.
“ஒபடையா!” என்று அலறினான். என்னுடைய பெயர்!”
அப்பா கிரோனோமீட்டரை எடுத்து ஜன்னலின் வெளிச்சத்தில் காட்டினார். அது மினுமினுத்தது.
“ஒபடையா ஸ்டார்புக்” என்று உரக்க படித்து காட்டினார் அப்பா. “போனாவென்ச்சர் கப்பலின் படை தலைவன் 1798” என்று பொறிக்கப்பட்டிருந்தது.
“அது என்னுடைய பெயர் தானே அப்பா !”
“ஆமாம் தாத்தாவின் பெயரை தான் உனக்கு நாங்கள் வைத்தோம். தாத்தா நீ பெரியவனானவுடன் இதை கொடுக்க எண்ணியிருந்தார் அதனால் என்னிடம் தற்போதைக்கு இது பத்திரமாக இருக்கட்டும் என்று கூறி அலமாரியில் வைத்தார். “இன்னைக்கு வெளியே நல்ல வெளிச்சமாக இருக்கிறதே. உன்னுடைய தொலைநோக்கியை எடுத்து மாடிக்கு என்னுடன் வா” என்று அழைத்தார் அப்பா.



அன்றையக்கு வெளியே இதமான
வெயில் அடித்து கொண்டிருந்தது.
நான்டுக்கெட் துறைமுகத்தில் ஒரு
கப்பல் பாய்மரம்
கட்டப்பட்டு பயணத்திற்கு தயாராக
நின்று கொண்டிருந்தது.
அலைகளுக்கு அப்பால் ஒரு கப்பல்
பாஸ்டன் நகரத்திற்கான திசையில்
பயணத்தை தொடங்கியிருந்தது.
“ஹார்ன் எந்த திசையில் உள்ளது
அப்பா” என்றான் ஒபடையா
“மிக தொலைவில் உள்ளது மகனே”
என்றார் அப்பா
“பிரான்ஸ் நாட்டையும் தாண்டியா?”
என்றான் ஒபடையா
“அதையும் தாண்டி” என்றார் அப்பா
“ஒரு நாள் நான் அங்கு செல்வேன்
அப்பா” என்றார் ஒபடையா.
ஒபடையாவின் தோளை அப்பா
மெலிதாக தட்டி கொடுத்து “எனக்கு
நம்பிக்கை இருக்கிறது ஒரு நாள்
நிச்சயமாக நீ அங்கு செல்வாய்” என்று
கூறினார் அப்பா.